பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 18 வியாழக்கிழமை 03.12.2020 கதிர் 28

### இது ரகசியம் அல்ல!


ஒரு கோட்டை சிறியதாக்குவது என்றால் பக்கத்தில் ஒரு பெரிய கோட்டைக் கீற வேண்டும் என்பார்கள்.

ராஜபக்ஷக்களின் அரசும் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அவ்வப்போது இத்தகைய பக்கம்02

## தமிழர் தாயகத்தை

# புரட்டிப் போட்டது 'புரெவி'ப் புயல்





## ★மூன்று மீனவரைக் காணோம்
## ★பத்துப் பேர் வரை படுகாயம்
## ★750 குடும்பங்களுக்குப் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 03

வங்காள விரிகுடாவில் உருவான 'புரெவி'ப் புயல் நேற்றுப் பின்னிரவில் நாட்டின் கிழக்குத் திசையிலிருந்து திருகோணமலைக்கும் – முல்லைத்தீவுக்கும் இடையே கரையைக் கடந்து, கடுங்காற்றுடன் அனர்த்தங்களை விளைவித்தபடி வவுனியாவைத்தாண்டி, முன்னேறி, மன்னாரைக் கடந்து, தமிழகத் திசையை நோக்கி நகர்ந்தது.

இந்தப் புயல் தமிழர் தாயகப் பிரதேசங்களைப் புரட்டிப் போட்டிருக்கின்றது. 11

## 124 ஆக அதிகரித்தது கொரோனா மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் 02

## வல்வெட்டித்துறையைத் தாக்கியது மினி சூறாவளி; நால்வர் படுகாயம்!

### 50 குடும்பங்கள் இடம்பெயர்வு

(ந.லோகதயாளன்)

யாழ்.வடமராட்சி, வல்வெட்டித்துறை – ஆதிகோவிலுக்கு அண்மித்த பகுதியில் நேற்றிரவு வீசிய மினி சூறாவளியால் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. 02

## இலங்கையில் ஒரே நாளில் 878 பேருக்குக் கொரோனா

### 25 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 878 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 410 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் 02

## விடத்தல்தீவில் வீடுகளுக்குள் நேற்று உட்புகுந்தது கடல் நீர்



மன்னார் விடத்தல் தீவு கிராமத்தில் உள்ள பல வீடுகளுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது. இதனால் அந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் 02

## மானிப்பாயில் பட்டப்பகலில் ஆயுதமுனையில் கொள்ளை

### புதைத்து வைத்த நகையையும் மிரட்டிச் சூறையாடிய இருவர்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட இரண்டு வீடுகளில் பட்டப்பகலில் கொள்ளையர்கள் இருவர் நகைகள் மற்றும் பணத்தைக்கொள்ளையடித்துத் தப்பித்துள்ளனர்.


சின்னப்பா வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், அங்கு வசிக்கும் வயோதிபர்களை கத்திகளைக் காண்பித்து மிரட்டி தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

கொள்ளையர்கள் இருவரும் ஜக்கெட் அணிந்து முகத்தை துணியால் மறைத்து வந்தனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 02

## மட்டு. காரைதீவு மாளிகைக்காட்டில் கடலுக்கு இரையாகிறது மையவாடி





வங்காளவிரிகுடாவில் ஏற்பட்ட சக்திமிக்க தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் மட்டக்களப்பு காரைதீவுக்குட்பட்ட மாளிகைக்காடு அந்நூர் பள்ளிவாசல் 02

## நெடுங்கேணியில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்!

வவுனியா மாவட்டம், நெடுங்கேணிப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் பணியாற்றியவர்கள் சிலர் கொரோனாத் தொற்றுடன் அண்மையில் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், அந்தப் பணியில் ஈடுபட்ட ஏனையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மணமகள் தேவை

1992, யாழிந்து வேளாளர், திருவாதிரை

ELECTRICAL ENGINEER, யாழ்ப்பாணம்

பதிவு இல 4638

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு

31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)

ஒன்லைன் திருமண சேவை

www.EQMarriageService.com

Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தந்திரங்களையே நாடுகின்றது எனத் தெரிகின்றது.

கொவிட் தொற்றுப் பிரச்சினை மெல்லப் பூதாகரமாகியது. அதையொட்டி வெடித்த மஹர சிறைக் கலவரம் – களேபரம் – இப்போது தெற்கைப் புரட்டி எடுக்கின்றது.

இந்த மஹர சிறைக் கலவரச் சீற்றத்திலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதாயின் இதை விட ஒரு பெரிய பிரச்சினை அரசுக்குத் தேவைப்படுகின்றது. அதுவும் தன் மீது பழி விழாத –முடியுமானால் தனக்குச் சாதகமான உணர்வலைகளை ஏற்படுத்துகின்ற – ஒரு பிரச்சினை அரசுத் தரப்புக்குத் தேவைப்படுகின்றது.

நேற்றுக் கொழும்பில் சில மட்டங்கள் ஊடாக ஊடகத் தரப்பு சிலவற்றுக்குக் கசிய விடப்பட்ட ஒரு செய்தி அத்தகைய திட்டத்தை நோக்காகக் கொண்டதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

தமிழ் தம்பதியர் இருவர் கிளைமோர் குண்டுடன் பிடிபட்டனர் என்றும், கடந்த ஒரு வருடத்துக்கு மேல் அவர்கள் இவ்வாறு வடக்கில் இருந்து தெற்குக்கு முக்கிய பொருள்களுடன் வந்து போயுள்ளனர் என்றும் கூறப்பட்டதாம்.

மலேசியாவுடன் தொடர்புபட்டு புலிகள் இயங்குகின்றனர் என்ற சாரப்படவும் பேசப்பட்டதாம்.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட பின்னடைவு, அதனால் தென்பகுதி மக்களிடையே சரிந்து வரும் ஆதரவு, மஹர சிறைக் கலவரத்தினால் ஏற்பட்டுள்ள மக்களின் சீற்றம் போன்றவற்றிலிருந்து தெற்கினதும் சர்வதேசத்தினதும் கவனத்தையும் பார்வையையும் திசை திருப்புவதற்காக மீண்டும் ஒரு தடவை புலி எழுச்சிப் புராணம் விரைவில் அவிழ்த்து விடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இத்தகைய திட்டங்களை கனகச்சிதமாக முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பேரினவாதப் போக்கின் உச்சியில் நிற்கும் சரத் வீரசேகரவும் இப்போது வசதியாகக் கிட்டியுள்ளார். அவரின் கீழ்தான் பொலிஸ் துறை உள்ளது. பிறகென்ன.....?

சிறைக் கலவரத்தில் உயிரிழந்தவர்கள் எல்லோருக்கும் கொரோனாத் தொற்று உள்ளது என்று அறிவித்து, அந்த மரணங்கள் தொடர்பான பிரேத பரிசோதனை முதல் அனைத்து விசாரணைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தமை மாதிரி அவரை வைத்துக் கொண்டு பல கப்ஸாக்களை அவிழ்த்து விடுவது இலகுவாக இருக்கும்.

சரத் வீரசேகரவின் பெயர் குறிப்பிட்டதும் ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது. அதைக் கட்டாயம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகர எதிர் சுமந்திரன் சொற்போர் வெடித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி பண்டிதரை அவரது தாயாருடன் சேர்த்து நினைவேந்தியமைக்காக சுமந்திரனை ஒரு பிடிபிடித்தார் சரத் வீரசேகரா. அப்போது அவர் கூறிய ஒரு விடயம் கவனிக்கத்தக்கது.

*“பல பொலிஸாரைக் கொன்றவர்கள் பண்டிதரும், கிட்டுவும். அத்தகைய ஒரு பயங்கரவாதியை அதே பொலிஸ்துறையைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினரின் துணையுடன் – பாதுகாப்புடன் –போய் நினைவு கூருவதற்கு உமக்கு எவ்வளவு திமிர் – துடுக்குத்தனம் – இருக்க வேண்டும்?”* – என்று சுமந்திரனைப் பார்த்து நாடாளுமன்றில் சீற்றத்துடன் கூறினார் சரத் வீரசேகர.

இதற்குப் பின்னால் ஒரு நகர்வு இப்போது முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. அதுவும் பண்டிதரை சுமந்திரன் நினைவு கூர்ந்த நிகழ்வு பகிரங்கமானமையை அடுத்து துரிதமாக ஆராயப்படுவதாகத் தெரிகின்றது.

சுமந்திரனுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பை விலக்குவதுதான் அந்த நகர்வு.

அப்படி ஒரு நகர்வு முன்னெடுக்கப்படுவது சுமந்திரனுக்குக் கூடத் தெரியுமோ தெரியவில்லை.

விசேட அதிரடிப்படை, பொலிஸ் பிரிவுக்குள் – அமைச்சர் சரத் வீரசேகரவுக்குக் கீழ் – வருவது நமக்குது தெரிந்ததுதான்.

புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் சுமந்திரனுக்கு எப்படி விசேட அதிரடிப் பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்பதுதான் அமைச்சர் சரத் வீரசேகராவின் ஆணித்தரமான கருத்து.

அதற்காக, அந்தப் பாதுகாப்பை விலக்குவதற்கும், அதனால் விளையக் கூடிய விபரீதங்களுக்கும் ராஜபக்ஷ சகோதர்கள் இடமளிப்பார்களா என்பது இன்னும் தெளிவில்லை.

அதுவும், மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக மீண்டும் புலிப் புலுடா விட இருக்கையில் – அதற்கு இடையில் – சுமந்திரனின் பாதுகாப்பைக் குறைக்கும் அல்லது விலக்கும் திட்டத்தை எப்படி நியாயப்படுத்துவது என்பதும் அதிகாரத் தரப்புக்குச் சிக்கலாகவே இருக்கும்.

“பொலிஸாரைக் கொன்றவர் பண்டிதர். அவருக்கு நினைவேந்தல் செய்யும் சுமந்திரனுக்கு விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பு எப்படிக் கொடுக்க முடியும்?” – என்று சரத் வீரசேகர கூறுவாராயின் அவரிடம் கேட்க வேண்டிய சில வினாக்கள் என்னிடம் உள்ளன.

பண்டிதர் போராளியாகச் சண்டையிட்டவர். பொலிஸாருடன் மோதினார். பொலிஸாரை அவர் கொன்றும் இருக்கக் கூடும். ஆனால் சரணடைந்த அறுநூறு பொலிஸாரை – தஞ்சம் புகுந்த பொலிஸாரை – கூண்டோடு கைலாசம் அனுப்பியவருக்கு இதிலும் விட அதி பாதுகாப்புக் கொடுத்து, சுகபோக வாழ்வு வழங்கி, நீங்கள் கொஞ்சிக் குலாவும் போது, சண்டையில் உயிரிழந்த – ஒரு சில பொலிஸாரை மோதலில் கொன்றிருக்கக் கூடியவரான – பண்டிதரை, நினைவேந்தியவருக்கு, பாதுகாப்புக்கென்று விசேட அதிரடிப் படையினரை வழங்குவது எப்படி தவறாகும்?

யாராவது அமைச்சர்கள் சரத் வீரசேகரவிடம் கேட்டுச் சொல்வார்களா.....?

இன்னொரு விடயத்தையும் அமைச்சரின் காதுகளில் போட்டு வைப்பது பொருத்தமானது என நினைக்கிறேன்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து அதுவரை போராடிய அனைத்துப் போராளிகளுக்கும் – அச்சமயம் சிறையில் இருந்த போராளிகளுக்கும் கூட – பொது மன்னிப்பு வழங்கினார் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா. அந்த நடவடிக்கையின் கீழ்தான் பழைய போராட்ட விடயங்கள் அல்லது போராட்டக் குற்றங்கள் மறக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்காமல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவில் இருந்து, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் வரை இப்போது தடையின்றி அரசியல் செய்கிறார்கள்.

1985 இல் வீரமரணமடைந்த பண்டிதரும் கூட அந்த 1987 இன் பொதுமன்னிப்பின் கீழ் குற்றம் களையப்பட்டு மன்னிப்பு வழங்கப்பட்ட ஒருவரே.

அவருக்கு நினைவேந்தல் செய்வது – 1990 ஜூனில் வெடித்த ‘ஈழயுத்தம் – 2’ இன் போது அராஜகம் புரிந்தவர்கள் என்று கூறப்படும் கருணா முதற்கொண்டு பிள்ளையான் வரையானோரை – பொதுமன்னிப்புக்கான எந்தப் பிரகடனமும் அவர்களுக்கு இதுவரை வழங்கப்படாத நிலையில் –

அவர்களுடன் கொஞ்சிக் குலாவுவதை விட அப்படி ஒன்றும் தவறான காரியமேயல்ல. அமைச்சர் சரத் வீரசேகராவுக்கு யார் இதைப் புரிய வைப்பார்....?

எனக்குத் தெரியவில்லை.

– மின்னல் –

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்த நிலையில் பிற்பகல் 3 மணியளவில் ஆனைக்கோட்டை, கூழாவடியில் வீடொன்றில் புகுந்த கொள்ளையர்கள் இருவர், அங்கு வசிக்கும் வயோதிபர்களை கத்தி முனையில் மிரட்டி புதைத்து வைக்கப்பட்டிருந்த 17 பவுண் நகைகளை அகழ்வு செய்து எடுத்தமையுடன் 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பித்தனர் என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயோதிபர்கள் இருவரும் தம்மிடம் நகைகள் எவையும் இல்லை என்று கூறிய போது, அங்கு இருந்த ஒளிப்பட அல்பத்தைக் காண்பித்து, அதில் வயோதிப் பெண் அணிந்திருந்த நகைகள் எங்கே என்று கொள்ளையர்கள் சித்திரவதை செய்துள்ளனர்.

சித்திரவதை தாங்க முடியாமல் வீட்டுக்குள் ஓர்இடத்தில் நகைகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தை வயோதிபர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். அதனை அகழ்ந்து நகைகளைக் கொள்ளையடித்த கொள்ளையர்கள், அலுமாரியில் இருந்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நேற்று இரவு 7 மணியளவில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவங்கள் இரண்டு தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண்டும் ஆனைக்கோட்டையில் திருமண நிகழ்வு நடந்த வீட்டுக்குள் இரவு புகுந்த கொள்ளையர்கள், திருமண நிகழ்வு காணொலியைக் காண்பித்து நகைகளைக் கொள்ளையிட்டிருந்தனர். அந்தக் கொள்ளைச் சந்தேக நபர்கள் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காணப்பட்ட அனைவரும் பேலியகொட மீன் சந்தை கொத்தணியுடன்

தொடர்புடையவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் மினுவாங்கொடை, பேலியகொட கொரோனாக் கொத்தணிகளின் ஊடாகத் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்து 861 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய மேலும் 487 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். இதையடுத்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 18,304 ஆக அதிகரித்துள்ளது.

6 ஆயிரத்து 982 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 124 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 124 ஆக அதிகரித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 2 பேர் இறுதியாக உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 13 ஐச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும், சிலாபம் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 124 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நேற்று வரை 111 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டு. காரைதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மையவாடி(மயானம்) மீண்டும் கடலுக்குள் காவுகொள்ளப்பட்டுவருகிறது.

மையவாடியின் கிழக்குப்பக்க மதில் சீற்றமிகு கடலலையால் அடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. மையவாடியின் கிழக்கு பக்கம் படிப்படியாக கடலுக்குள் உள்வாங்கப்பட்டுவருகிறது. அதனால் அங்குள்ள ஜனாஸாக்கள் (பிரேதம்) கடலுக்குள் இழுத்துச்செல்லப்படுகின்றன. மக்கள் உணர்ச்சி வசப்பட்டவர்களாக பிரேதங்களை வேறிடத்தில் அடக்கவும் சிந்திக்கின்றனர்.

நேற்றுக்காலையில் பொதுமக்கள் அங்கு ஒன்றுகூடினர். நேற்று முந்தினம் அதிகால. முதல் மையவாடி கொஞ்சம் கொஞ்சமாகக் கடலுக்கு இரையாகி வருகிறது.

## வல்வெட்டித்துறையைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெயர்ந்த மக்கள் அந்தப் பகுதியிலுள்ள தனியார் மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திடீரென வீசிய கடும் காற்றால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

வீடு ஒன்றின் கூரை வீழ்ந்து சிறுமி உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பீற்றர் மஹிந்தன் (வயது 35) என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். அவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

## விடத்தல்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொடுத்துள்ளனர்.

குறிப்பாக நேற்றுக் காலை தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் அதிகரித்த காற்று மற்றும் தொடர்ச்சியான மழை நீடித்து வருகின்ற நிலையில் மக்கள் வீடுகளில் முடங்கிய நிலையில் உள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622



# தடுப்பூசி பெற அரசு எடுத்த நடவடிக்கைதான் என்ன?

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி சஜித்



கொவிட் தொற்றாளர்கள் நாட்டில் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், தடுப்பூசி பெற்றுக்கொள்ள அரசாங்கம் எடுத்திருக்கும் அவசர நடவடிக்கை என்ன என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன் உயர் தரத்தினாலான தடுப்பூசியை பெற்றுக்கொண்டு அதனை அனைவருக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

உலகளாவிய ரீதியில் கொவிட் தொற்று அதிகரித்துச் செல்கின்றது. எமது நாட்டிலும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இவ்வாறான நிலையில் தனவந்த நாடுகள் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்தத் தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளத் தேவையான கேள்விகோரல்களை மேற்கொண்டிருக்கின்றன. எமது நாடு இதுதொடர்பாக இதுவரை எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன எனக் கேட்கின்றேன்.

மேலும் அடுத்த வருடம் நடுப்பகுதிவரை கொவிட் பிரச்சினை இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள சர்வதேச நாடுகளுடன் அரசாங்கம் எவ்வாறான பேச்சுகளை மேற்கொண்டிருக்கின்றது? நாடு என்ற வகையில் முன்னுக்கு செல்ல அரசாங்கம் எடுத்துவரும் வேலைத்திட்டங்கள் என்ன? இவை எவையுமே மக்களுக்குத் தெரியாமல் இருக்கின்றன. இதுதொடர்பாக அரசாங்கம் முறையான அறிவிப்பொன்றை நாட்டுக்கு விடுக்கவேண்டும்.

மேலும் அரசாங்கம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும்போது தரத்தில் உயர்ந்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தற்போது தடுப்பூசிக்கு உலகளாவிய ரீதியில் பாரியளவில் கேள்வி கோரல்கள் இருக்கின்றமையால் தட்டுப்பாடுகள் ஏற்படலாம். அதனால் சர்வதேச நாடுகளில் இருக்கும் எமக்கு நெருக்கமானவர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு அதனைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அவ்வாறு தடுப்பூசி பெற்றுக்கொள்ளப்பட்டால் அதனை எவ்வாறு விநியோகிப்பது? அதற்காக அரசாங்கம் எடுத்திருக்கும் வேலைத்திட்டம் என்ன? – இவை தொடர்பில் வெளிப்படுத்தவேண்டும். அத்துடன் பெற்றுக்கொள்ளப்படும் தடுப்பூசியை நாட்டில் அனைத்து மக்களுக்கும் இலவசமாக வழங்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றேன். – என்றார்.

## போதைக்கு அடிமையாவதைத் தடுக்க சுதேச மருத்துவத்தில் விசேட திட்டம்

போதைப்பொருள் பாவனைக்கு இளைஞர்கள் அடிமையாவதைத் தடுப்பதற்கு உள்நாட்டு மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி சிறப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுதேச மருத்துவ ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயகொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2021 ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு இந்தத் திட்டத்தின் ஊடாக மறுவாழ்வு அளிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமாக ஆயுர்வேதம், போதனைகள், தியானம், இசை, சிகிச்சை மற்றும் யோகாசன பயிற்சிகள் ஆகியவையும் இடம்பெறும் என அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார விதிகளை மீறிய குற்றம் இதுவரை 950 பேர் கைதாகினர்!

சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 950 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையிலான காலப்பகுதிகளிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது செயற்பட்ட 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுக்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வனப் பாதுகாப்புச் சட்டங்களை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

### அமைச்சர் சி.பி.ரத்னாயக்க எச்சரிக்கை



வனபாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் திருத்தம் செய்யப்படும் என்றும் அழிவடைந்துள்ள வனப்பகுதிகளை புதுப்பிக்கும் மீள நடுகை செயற்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவிற்கு எதிராக நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் திவிநெகும செயற்திட்டத்தை மையப்படுத்தி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்களுக்காக நீதித்துறை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நீதிமன்ற செயற்பாடுகள் அரசியல் தலையீடுகள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுகின்றன.

வனபாதுகாப்பு தொடர்பான சட்டங்களை திருத்தியமைக்கவும், தேவையான புதிய சட்டங்களை இயற்றவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனபாதுகாப்புச் சட்டங்களை மீறுபவர்களுக்கு சிறை தண்டனை காலத்தை நீடிக்கவும், தண்டப் பணத்தை அதிகரிக்கவும் ஆரம்ப கட்ட யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையிலான காடழிப்புக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, வன மீள்நடுகைத் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

## 297 இலங்கையர் நாடு வந்தடைவு!

தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று கொரோனா பரவல் காரணமாக அங்கு சிக்கித் தவித்த மேலும் 297 இலங்கையர்கள் நேற்று (புதன்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாயிலிருந்து 162 பேரும் மாலைதீவிலிருந்து 44 பேரும் கட்டாரிலிருந்து 21 பேரும் இந்தியாவின் மும்பையிலிருந்து 70 பேரும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைத்து பயணிகளுக்கும் விமான நிலையத்தில் பல்வேறு தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களால் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை தொழில்வாய்ப்புக்காக பல்வேறு நாடுகளை நோக்கி இன்றைய தினம் நாட்டிலிருந்து 425 இலங்கையர்கள் புறப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சடலங்களை அடக்கம் செய்தல் விவகாரத்தில் தொழில்நுட்பக் குழுவில் நம்பிக்கையில்லை!

## எச்.எம்.ஏ.ஹலீம் எம்.பி. அதிருப்தி

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு தொழில்நுட்ப குழு அனுமதி வழங்குமென்ற நம்பிக்கை எமக்கில்லை. அதனால் அரசாங்கம் முஸ்லிம்களின் கலாசாரத்துக்கு மதிப்பளித்து சாதகமான முடிவொன்றை எடுக்குமென நம்புகிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எச்.எம்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. உயிரிழப்புகளும் நூறு பேரைக் கடந்துள்ளது. கொவிட் ஒழிப்புக்காக சுகாதாரத் துறையினரும் பாதுகாப்பு படையினரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். என்றாலும் நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்டி மாவட்டத்தில் ஒரே ஒரு



பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரம் மாத்திரமே உள்ளது. முழு கண்டி மாவட்டத்திற்கு ஓர் இயந்திரம் போதாது. இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் கொவிட் காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுகின்றமை தொடர்பில் பாரிய பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினை தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்திலும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ள போதிலும் இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. தொழில்நுட்பக் குழுவின் அறிவிப்பு கிடைக்கும்வரை காத்திருப்பதாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் கூறுகிறது. தொழில்நுட்பக் குழு மாறுபட்ட நிலைப்பாட்டை கொண்டிருப்பதால் அந்தக் குழுவின் ஊடாகத் தீர்வுகிடைக்குமென எமக்கு நம்பிக்கையில்லை.

மேலும் தொழில்நுட்பக் குழுவை நாம் பல தடவைகள் சந்தித்துள்ளோம். ஒரு சந்தர்ப்பத்தில் சடலங்களை நல்லடக்கம் செய்ய குறித்த குழு இணங்கியிருந்தது. அதற்காக மன்னார் பகுதியில் காணியொன்றும் அடையாளம் காணப்பட்டது. ஆனால், பின்னர் அந்தத் தீர்மானத்தை மாற்றிக்கொண்டது.

அரசாங்கம் இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அமையும் ஒவ்வொரு அரசாங்கமும் நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் கௌரவமளித்திருந்தன. இந்த அரசாங்கமும் முஸ்லிம்களின் கலாசாரத்தை மதிக்குமென நம்புகிறோம்.

உலகின் ஏனைய நாடுகளில் அடக்கம் செய்வதற்கான அனுமதிவழங்கப்பட்டுள்ளது. உலகசுகாதாரஸ்தாபனமும் சடலங்களை அடக்க செய்ய முடியுமெனக் கூறியுள்ள நிலையில் தொழில்நுட்பக் குழு அனுமதி வழங்காதுள்ளது. அதனால் அரசாங்கம் இந்த விடயத்தில் சாதகமான முடிவை எடுக்குமென நம்புகிறோம்.– என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விபரீதமான நியமனம்

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரங்களை அடுத்து கட்டவிழ்கின்ற விடயங்கள், தென்னிலங்கையின் அரசியல் செல்நெறி தொடர்பில் பலத்த சந்தேங்களைக் கிளப்பியுள்ளன.

சிறைக் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு கொரோனாத் தொற்றுள்ளது என்ற அறிவிப்பு உண்மையா என்பது குறித்து பல தரப்புகளிலும் சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கின்றது.

அதிகாரத் தரப்பு இவ்விடயத்தில் இழைத்திருக்கக் கூடிய திமிர்த்தமான – அட்டகாசப் போக்கான – அராஜகத்தை அல்லது அத்துமீறலை மூடி மறைப்பதற்குரிய எத்தனமோ இது என்று தென்னிலங்கை வட்டாரங்கள் பலவும் அச்சத்துடனும் கவலை தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களுக்குக் கொரோனாத் தொற்று உள்ளது என்று பிரகடனப்படுத்தினால் அந்தச் சடலங்களில் பிரேத பரிசோதனை செய்ய முடியாது. பிரேத பரிசோதனை மூலம் சாவுக்கான காரணம் மற்றும் விடயங்கள் அம்பலமாவது இதன் மூலம் ஒரேயடியாக மூடி மறைக்கப்படும். அது மட்டுமல்ல. கொரோனாத் தொற்றுள்ளவர்களின் சடலங்கள் உறவினர்களுக்குக் காட்டப்படாமல், அவர்களிடம் கையளிக்கப்படாமல், எரித்து சாம்பலாக்கப்பட்டு விடும். அதனோடு அந்தப் பிரேதத்தின் உயிரிழப்புக்கான அத்துமீறல் காரணங்களும் நிரந்தராக மூடி மறைக்கப்பட்டு அஸ்தியாகி விடும்.

அத்தகைய தந்திரோபாயத் திட்டத்துடன்தான் இத்தகைய அறிவிப்பு – உயிரிழந்த கைதிகளுக்கு கொரோனாத் தொற்றாளி பட்டம் கொடுத்தல் – அரங்கேறியதோ என்று மனித உரிமை ஆர்வலர்கள் தரப்பில் சந்தேகம் கிளப்பப்படுகின்றது. இது நியாயமான சந்தேகம்தான்.

அதேசமயம், இந்தக் கலவரத்தை – களேபரத்தை – அடுத்து தென்னிலங்கையில் மக்கள் மத்தியில் எழுந்தள்ள உணர்வலைகள் குறித்து அறிந்துள்ள ஆட்சித் தரப்பு அதற்கு பிரதிபலிப்பாக எடுத்திருக்கும் நடவடிக்கையும் பல தரப்புகளிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தையை சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராக நியமித்து, ‘இந்த விடயத்தை கவனித்து வா’ என்று அனுப்பியிருக்கின்றார் நாட்டின் அதி உத்தமர்.

1979 இல் வடக்கில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் கிளர்ந்தபோது அதை முளையில் கிள்ளி அடக்கி விட்டு வா என்ற உத்தரவோடு பிரிகேடியர் ரி.ஜ.வீரதுங்கவை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா விசேடமாக நியமித்து வடக்கே அனுப்பி வைத்தார்.

அது போன்ற நியமனம் ஒன்றைத்தான் இப்போது இராணுவ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சிறை விவகாரத்தில் செய்திருக்கின்றார் என்பதை அவர் நியமித்த இராஜாங்க அமைச்சரின் தகுதி நிலை, பண்பியல்புகள், செயற்பாடுகள், கடந்த கால நடவடிக்கைகளை அறிந்தவர்கள் இலகுவாகப் புரிந்து கொள்வர்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்தவர் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருந்த ரத்வத்த.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு யுத்தத்தை நடத்துவதற்கு சகோதரரான முன்னாள் இராணுவக் கேணலான கோட்டாபய ராஜபக்ஷ வாய்த்த மாதிரி –

அதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு யுத்தத்தை நடத்துவதற்கு இராணுவத் தொண்டர் படையில் லெப்டினன்ட் கேணலாக இருந்த – அவரின் சித்தப்பா முறை உறவினரான – அநுருத்த ரத்வத்த வாய்த்தார். (அவர் பின்னர் தமக்கு ஜெனரல் பட்டத்தை சுவீகரித்தமை பிறகு நடந்த அதிகாரத் திருக்கூத்து.)

அந்த அநுருத்த ரத்வத்தையின் ‘குழப்படிக்கார’ மகன்தான் லொஹான் ரத்வத்தை. அண்மைக் காலம் வரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உதவியாளராகச் செயற்பட்டவர்.

2001, டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆட்சி மாற்றம் வந்தது. ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு கவிழ்ந்து, ரணிலின் அரசு அத்தேர்தலில்தான் வெற்றி பெற்றது. கடும் போட்டிக்கு மத்தியில் நடந்த அந்தத் தேர்தல் நாளின் போது வாக்களிக்க வாகனத்தில் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்து முஸ்லிம் இளைஞர்கள் உடத்தலவின்னவில் வழி மறிக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டு, வாகனத்துடன் எரிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் தந்தை அநுருத்த ரத்வத்தை, மகன் லொஹான் ரத்வத்தை உட்படப் பலர் ‘ட்ரயல் – அட் பார்’ மன்றில் நிறுத்தப்பட்டனர். உண்மையில் என்ன நடந்தது என்பது பலருக்கும் தெரியும். எனினும் கண்கண்ட சாட்சிகள் இல்லாமையால் இருவரும் தப்பினர். எனினும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்த ஐந்து இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் சில காலத்தில் மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றம் அந்த ஐவரையும் கூட விடுதலை செய்தது.

தந்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது பப்புவா நியூகினியாவுக்குச் சென்ற லொஹான் ரத்வத்தை அங்கும் ஒரு கொலை வழக்கில் சிக்கினார். கொழும்பில் றக்பி வீரர் தாஜுதீன் கொல்லப்பட்ட மாதிரி, அங்கு றக்பி வீரர் ஜோல் பெரா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதுவும் கூட அந்த றக்பி வீரரின் அழகிய காதலியை மையமாக வைத்து நேர்ந்த விபரீதம்தான். அந்த வழக்கிலிருந்தும் போதிய – கண்கண்ட – சாட்சியம் இல்லாதமையால் லொஹான் ரத்வத்தை தப்பினார்.

சுடுகலன்களில் பற்றுக் கொண்ட ‘ஒருவரிடம் சிறைக் கவனிப்பு’ அளிக்கப்பட்டிருக்கின்றது. அவரின் கவனிப்பு விபரீதத்துக்குத்தான் வழி செய்யும் போல தோன்றுகின்றது.

# கிழக்கில் கொரோனாத் தொற்று எண்ணிக்கை 257 ஆக அதிகரிப்பு!

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் லதாகரன் தகவல்



கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த (செவ்வாய்க்கிழமை) அக்கரைப்பற்று பிரதேசத்தில் 32 பேரும், அட்டாளைச்சேனையில் 06 பேரும், ஆலையடி வேம்பு பகுதியில் ஒருவரும், வாழைச்சேனை பகுதியில் 04 பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடனும், பேலியகொட மீன்சந்தையுடனும் தொடர்புபட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பு கொண்டவர்களே அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 138 பேர் கொரேனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளமையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 92 பேரும் அம்பாறை சுகாதார பிரிவில் 11 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 16 பேரும் கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்ட 109 பேர் இதுவரையில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் மாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அக்கரைப்பற்று பொதுச் சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்பான தகவல்களை பொதுசுகாதார பிரிவினருக்கு வழங்குமாறும் கொழும்பு உள்ளிட்ட பிற இடங்களில் இருந்து வருகைதருவோர் தொடர்பிலும் பொதுமக்கள் விழிப்பாக இருந்து சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல்களை வழங்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியசாலையிலும் கைதிகள் மோதல்; 30 பேர் சிறை வைத்தியசாலைக்கு மாற்றம்

றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கைதிகளில் 30 பேர், சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையின்போது, காயமடைந்த கைதிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பலத்த காயங்களுக்குள்ளான நான்கு கைதிகளுக்கு, அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது என றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஷெல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற கைதிகளுக்கு இடையிலும் நேற்று முன்தினம் சிறு மோதல் ஏற்பட்டுள்ளது.

இதற்கமையவே, 30 கைதிகள் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர் என்று றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

மஹர சிறை அமைதியின்மையில் காயமடைந்த ஏனைய கைதிகள் தொடர்ந்தும் றாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# மஹர சிறைச்சாலை வன்முறை தொடர்பில் விசாரணை தீவிரம்

கொழும்பு, டிசெ.02

மஹர சிறைச்சாலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மூன்று வகையான மருந்து வில்லைகள் குறித்தும், சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், மஹர சிறைச்சாலையில் இருந்து 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து வில்லைகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையானது தற்போதைய நிலையில் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சிறைச்சாலைகளில் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான முழுமையான விசாரணைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகள் இன்று!

இலங்கையில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பு மருந்து தொடர்பில் நேற்று (புதன்கிழமை) விரிவான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

கேகாலை பிரதேசத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவரால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கொரோனாத் தடுப்பு மருந்து தொடர்பாகவே இதன்போது ஆராயப்பட்டது.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், ஜனாதிபதி இது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். அத்தோடு, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 50 தொற்றாளர்களுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.

16 2020

பால்நிலை வன்முறைக்கு எதிரான
16 நாள் செயற்பாடு - 2020
16 Days of Activism Against Gender Based Violence

JSAC

நான் பெண்களிற்கு எதிரான வன்முறையில்
பங்கேற்கும் ஒருவன் அல்லன்..........
வன்முறையற்ற சமுதாயத்தை நோக்கிய பயணத்தில்
நீங்களும் இணையுங்கள்............!

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

# நான்கு கோடிப் பேருக்கான தடுப்பூசி இலங்கை பெறும்

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை



கொவிட் – 19 வைரஸ் பரவலை கட்டுப் படுத்த சகல விதமான நடவடிக்கைக ளையும் நாம் முன்னெடுத்து வருகின்ற நிலையில் வைரஸ் பரவலில் இருந்து மீள எமது மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதே எமது அடுத்த இலக்காக உள்ளது. எனினும் இன்னமும் கண்டு பிடிக்கப்படாத ஒரு தடுப்பூசிக்காக எதிர் பார்த்துக்கொண்டுள்ளோம் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார். அங்கீகரிக்கப் பட்ட தடுப்பூசி கிடைத்தவுடன் இலங்கை யில் 4 கோடியே 20 லட்சம் பேருக்கான அளவில் ஊசி கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் பரவல் விடயத் தில் தேசிய மட்டத்திலான விடயங்கள், கண்காணிப்பு, அவசர நிலைமைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கிறோம். சர்வதேச போக்குவரத்து பயணங்கள் மூடப்பட்டுள்ளன. அத்தியாவசிய சுகாதார சேவைகள் எந்தக் காரணம் கொண்டும் வீழ்ச்சி கண்டிராத விதத்தில் கொவிட் நிலைமைகளையும் கையாண்டு வரு கின்றோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள், கடன் உதவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளை எவ்வாறு கையாண்டு வருகிறோம் என்பதை இந்த சபைக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்துள்ளேன்.

கொவிட் – 19 வைரஸைக் கட்டுப்படுத்த தெளிவான வேலைத்திட்டம் மற்றும் அதனை முன்னெடுக்கும் நடவடிக்கை களை எடுத்து வருகின்றோம். இதன் அடுத்த கட்டமாக கொவிட் – 19 வைரஸ் பரவலுக்கான தடுப்பூசியைக் கொண்டு வரும் தேவையே உள்ளது. இந்த வேலைத் திட்டம் உயரிய தரம் கொண்டதாக இருக்க வேண்டும். இப்போதும் தடுப்பூசி கண்டு பிடிப்பதில் போட்டித்தன்மை உள்ளது. எனினும் எமது மக்களுக்குத் தடுப்பூசி களைக் கொடுக்கையில் எமது மக்கள் சுகாதார துறை மீதும் தடுப்பூசி மீதும் வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டும். குறைந்தகால மற்றும் நீண்ட கால உபாதைகள் வராத விதத்திலான தடுப்பூசிகளை வழங்க வேண்டும். தேசிய பொருளாதாரததுக்குத் தாக்கம் ஏற்படாத விதத்தில் விலைகளைச் சமாளிக்கக் கூடியதான தடுப்பூசியாக அது இருக்க வேண்டும். 2021 ஆம் ஆண்டில் கொவிட் – 19 வைரஸைத் தடுக்கும் வேலைத்திட்டத்தில் இவை பாரிய சவா லாக இருக்கும் என நம்புகிறேன். எனவே இந்த சவால்களை வெற்றி கொண்டு அதற்கான சிறந்த தடுப்பூசி ஒன்றைப் பெற்றுக்கொடுக்கவும் அதற்கான ஆய்வுகளை செய்யவும் சுகாதார அமைச் சின் சார்பில் சிறப்பு குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இருந்தே தடுப்பூசி தொடர் பில் கவனம் செலுத்தி வந்தோம். அதற்கமைய உலக சுகாதார ஸ்தாபனத் துடன் இணைந்து உடன்படிக்கைக ளைச் செய்துள்ளோம். இதன்போது பரிசோ தனைக்காக 20 வீதமான இலங்கை யர்களுக்கு இந்தத் தடுப்பூசியை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. அந்த வகையில் தடுப்பூசி கண்டறியப்பட்டவுடன் முழு மக்களுக்கும் இந்த தடுப்பூசி வழங் கப்படும். ஆனால் இன்னமும் தடுப்பூசி கண்டறியும் நடவடிக்கைகள் மூன்றாம் கட்டத்தைத் தாண்டவில்லை. எப்போது தடுப்பூசி வழங்கப்படும் என்பது எவருக் குமே தெரியாதுள்ளது. தடுப்பூசி வழங் கப்பட்டதும் அதனைப் பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. இன்னமும் கண்டறி யப்படாத ஒரு தடுபூசிக்காக நாம் இவ்வா றான முன்னாயத்த வேலைத்திட்டங் களைச் செய்துள்ளோம்.

மேலும் கொவிட் – 19 வைரஸ் தாக்கம் மூலமாகப் பாதிக்கப்பட்டவர்களின் வர்த்த கத்தைச் சமாளிக்க தற்காலிக காப்புறுதி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது மிக முக்கியமான வேலைத்திட்டம் என்றே நாம் கருதுகிறோம். 2021 ஆம் ஆண்டில் உலகில் அதிகளவில் கொவிட் –19 கட்டுப்பாட்டில் வரும்.

நாமும் அதனை இலக்காக கொண்டு இலங்கையில் தேசிய வைத்தியசாலை களை அபிவிருத்தி செய்ய வரவு – செலவு திட்டத்தில் கவனத்தில் கொண்டுள் ளோம். மாவட்ட வைத்தியசாலைகளின் தரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங் களும் முன்னெடுக்கப்படுகின்றன. – என்றார்.

## கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை







*வவுனியா பொலிஸாரினால் விசேட கொரோனா விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்திட்டம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் வவுனியா பழைய பஸ் நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.*

*வவுனியா ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியாவில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கே கொரோனா விழிப் புணர்ப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன*

*இதற்கான நிகழ்வில் வவுனியா மற்றும் மன் னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சென விரத்ன, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்சலால் த சில்வா, வவுனியா உதவிப் பொலிஸ் அத் தியட்சகர் எம்.எஸ்.பி.மல்வலகே, வவுனியா பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி, வவுனியா போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி திஸாநாயக்க, பொலிஸார், ஓட்டோ சாரதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (100)*

# தமிழ் இந்து மக்களின் மத உரிமைகளை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும்!



## தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டு அறிக்கை

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

தமிழ் இந்து மக்களின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான கார்த்திகைத் தீப விளக்கீட்டினை இராணுவமும் பொலிஸும் இணைந்து குழப்பியதற்கு எதிராகவும், அரசு இது குறித்து எத்தகைய நடவடிக்கையையும் மேற் கொள் ளாததைக் கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளின் சார்பில் மாவை சோ. சேனாதிராஜா கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட் டுள்ள கூட்டு அறிக்கையின் முழு விபரம் வருமாறு:–

தமிழ் மக்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். அவர்களுக்கு மிகவும் தொன்மையான மொழி, மத, கலாசார பண்பாடுகள் உண்டு. பாரம்பரியமாகவே மத அனுஷ்டானங்களையும், கலாசார பண்பாடுகளையும் மிக இறுக்கமாகப் பின்பற்றி வரும் ஓர் இனமாகவே தமிழ்த் தேசிய இனம் இலங்கை மண்ணில் வாழ்ந்து வருகின்றது. அவர்களது கலாசாரப் பண்பாடுகளைப் பற்றிப் பிடிப்பதற்காகவும் அவற்றை யாரும் அழித்து விடக்கூடாது என்பதற்காகவும் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் போராடி வருகின்றது. அவற்றைத் தட்டிப்பறிக்க முனைபவர்களுக்கு எதிராக விட்டுக்கொடுப்பின்றித் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளுக்காகப் போராடி மரணித்துப் போனவர்களைத் தமிழ் மக்கள் அஞ்சலிக் கக்கூடாது என்பதற்காக, அரசு பொய்யான தவறான வழிகாட்டுதல்களை நீதிமன்றங்களுக்கு வழங்கி, தமக் காக மரணித்துப் போனவர்களுக்கு அஞ்சலிப்பதற்குத் தடையினைப் பெற்றிருந்தார்கள். அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற தமிழ் இந்து மக்களின் பாரம்பரிய மத அனுஷ்டானமான கார்த் திகை விளக்கீட்டினை இராணுவமும் பொலிஸாரும் இணைந்து பல இடங்களில் மிக அநாகரிகமான முறையில், அந்த மக்களின் மத நம்பிக்கைகளையும் கடவுள் நம்பிக்கையையும் அவமதிக்கும் வகையில் அதனைத் தடுத்து, அச்சுறுத்தி அவர்களை அடக்க முயற்சித்தார்கள்.

இலங்கையில் இருக்கக்கூடிய மக்கள், தாம்தாம் விரும்பிய மதங்களைப் பின்பற்றுவதற்கும், அதனை அனுஷ்டிப்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் அரசியல் சாசன ரீதியாக சகல உரித்தும் உடையவர்கள். ஆனால், கடந்த 29ஆம் திகதி இந்து மக்களின் கார்த்திகை விளக்கீட்டின் போது புதுக்குடியிருப்பு, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத் தீவு, யாழ்ப்பாணத்தின் வடமராட்சி, வலிகாமம் போன்ற பல பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் வீடுக ளுக்குள் சென்றும், இந்து ஆலயங்களுக்குள் அத்துமீறி நுழைந்தும், அவர்கள் பக்தியோடு ஏற்றிய தீபங்களை சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்து அவர்களது அனுஷ்டானங்களை அவமதித்ததுடன், சில பெரியோர்கள் தாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். கோவில் அர்ச்சகர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கின்றார்கள். கார்த்திகைத் தீபமேற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்து மக்களின் மிக முக்கிய மத அனுஷ்டானமான கார்த்திகை விளக்கீட்டினை இலங்கை அரசின் பொலிஸா ரும் இராணுவத்தினரும் திட்டமிட்ட வகையில் ஆயுத முனையில் குழப்பியிருக்கிறார்கள். கார்த்திகை விளக்கீடு என்பது இந்து மக்களின் மிக முக்கியமான அனுஷ்டான நாள் என்பதும், காலாதிகாலமாக அதனை அவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள் என்பதும், இலங்கை அரசுக்கும் பொலிஸாருக்கும் படையினருக்கும் தெரிந்த விடயம்.

உண்மைநிலை அப்படியிருக்க, அதனை அச்சுறுத் தித் தடை செய்ய முயற்சிப்பது என்பது தமிழ் மக்களின் மத வழிபாட்டுரிமையைப் பறித்தெடுப்பதாகும். அரசின் திட்டமிட்ட இந்தச் செயற்பாடானது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தம்மை ஒரு ஜனநாயக அரசு எனக் கூறிக்கொள்ளக் கூடியவர்கள் இன்னுமொரு தேசிய இனத்தின் மத உரிமை யை அச்சுறுத்திப் பறிப்பதென்பதும் தடை செய்வதென் பதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

படையினரதும், பொலிஸாரினதும் இந்தத் திட்டமிட்ட செயற்பாட்டுக்கு அரசு மன்னிப்புக் கோரவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாது என்னும் உத்தர வாதம் வழங்கப்படவேண்டும்.

அரசு தமிழ் மக்களுடைய மொழி, மத, நில உரிமை களைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்குமாக இருந்தால், தமிழ் மக்களைத் தொடர்ச்சியான ஓர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசே வழிச மைக்கின்றது என்று பொருள்படும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்தக் கோரிக்கைகளுக்கு இசைவாக அரசு உடனடியாக தனது மன்னிப்பைக் கோரவேண்டும் என்றும் அல்லது குறைந்தபட்சம் நடந்து முடிந்த சம்பவங்களுக்குத் தனது வருத்தத்தையாவது தெரிவிக்க வேண்டும் என்றும் அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை மற்றும் வழிபாட்டுரிமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர் பார்க்கின்றோம் – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாஸா எரிப்பு விவகாரத்தைப் போன்றுதான் கார்த்திகைத் தீபத்திலும் கைவைத்தது அரசு!



## சீறுகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.03

முஸ்லிம் மக்களுடைய ஜனாஸாக்களை எரியூட்டி இஸ்லாமிய மதவிவகாரத்தை அரசு எவ்வாறு மீறியதோ, அதுபோலவே கார்த்திகைத் தீபத் திருநாள் விடயத்திலும் அரசின் செயற்பாடு அமைந்துள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மதவிவகாரங்களில் அரசின் இவ்வாறான தலையீடுகளுக்கு தனது கண்டனங்களையும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை கார்த்திகைத் தீபத் திருநாளில் தீபமேற்றிய யாழ்.பல்கலைக்கழக மாணவன் கைதுசெய்யப்பட்டமை மற்றும் தீபமேற்றுவதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உலகெங்கிலும் இந்து மக்களால் கொண்டாடப்படும் கார்த்திகைத் தீபத்திருநாளை எமது மக்கள் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலே கொண்டாடியபோது, தீப்பந்தங்களை ஏற்ற விடாது இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தடைசெய்தனர்.

குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவனைக் கைதுசெய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றமை, அதேபோல பரந்தன் சந்தியிலே வயோதிபர்களைத் தாக்கியமை போன்ற பல்வேறு சம்பவங்கள் ஊடகங்கள் வாயிலாக நாம் அறியக்கூடியதாக இருந்தமையுடன், மக்களாலும் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதை சிங்களப் பௌத்தத்தின் ஓர் இன, மத வெறி நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

சிங்களவர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கலாம், நாங்கள் தமிழர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினர் ஆயினும் சமமானவர்கள். அதேபோல் பௌத்தர்கள் எண்ணிக்கையில் அதிகம், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸாமியர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராவர்.

முஸ்லிம் மக்களுடைய ஜனாஸாக்களை எரிக்க முற்பட்டு அவர்களுடைய மதநடவடிக்கையை அரசு எவ்வாறு மீறியிருந்ததோ, அவ்வாறு இந்து மக்களுடைய மதவிவகாரத்திலிலும் அரசு கைவைத்திருக்கின்றது.

இதேவேளை கிறிஸ்தவர்களுடைய மதவிவகாரங்களில் கைவைப்பதற்கு அரசு சர்வாதிகாரத்தைப் பயப்படுகின்றதோ, அல்லது எதிர்வரும் காலங்களில் கிறிஸ்தவர்களுடைய மத உரிமைகளிலும் தலையீடு செய்யுமோ தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் இவ்வாறான மதவிவகாரங்களில் அரசு தலையீடு செய்வது கண்டனத்திற்குரிய விடயமாகும் – என்றார்.

# தமிழர் – முஸ்லிம்கள் நல்லுறவில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கோரிக்கை



ஜனாஸா விடயத்தைப் பயன்படுத்தி தமிழர் – முஸ்லிம்கள் உறவுகளில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

உலக சுகாதார ஸ்தாபனம் கூறும் விடயங்களை நடைமுறைப்படுத்துகின்ற அரசு ஏன் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவர்களின் வழிகாட்டல்களை பின்பற்றுவதில் தயக்கம் காட்டுகின்றது?

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைப்படி எரிக்க வேண்டும் எனக் கூறும் அரசு ஏன் மினுவாங்கொடையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவுடன் நாட்டை முடக்கவேண்டும் என சுகாதார அதிகாரிகள் கூறியபோது அதைக் கேட்கவில்லை?

இன்று ஜனாஸா விடயத்தைப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் உறவுகளில் குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை அரசால் முன்னெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு முஸ்லிமும் ஜனாஸாவை அடக்க அனுமதி தாருங்கள் என்றே கோருகின்றார்களே தவிர, அதை மன்னாரிலா யாழ்ப்பாணத்திலா அம்பாந்தோட்டையிலா என்று கேட்கவில்லை.

இதை பயன்படுத்தி தமிழர் – முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே உள்ள புரிந்துணர்வைக் குழப்ப வேண்டாம் – எனக் கூறினார்.

# விசேட வைத்திய குழுவைச் சந்திப்பதற்கு முஸ்லிம் எம்.பிக்களுக்கு வாய்ப்பளிங்கள்

## பைசல் காசிம் எம்.பி. வேண்டுகோள்



விசேட வைத்திய குழுவை சந்திப்பதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அத்துடன் முஸ்லிம்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதால் அவர்கள் வைத்தியசாலைகளுக்கு மருத்துவ தேவைகளுக்காகச் செல்ல அச்சப்படுகின்றனர். அதனால் இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற – அடுத்த வருடத்துக்கான வரவு – செலவு திட்டத்தில் சுகாதார அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான – குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களின் சடலத்தை எரிக்கும் விடயத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் முஸ்லிம்கள் மிகவும் மனவருத்தத்துடன் உள்ளனர். அமைச்சரவையிலும் மக்கள் மேடைகளிலும் நாடாளுமன்றத்திலும் இந்த விடயம் பேசப்பட்டது. ஆனால், தீர்வுகிடைக்கவில்லை. இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் குழு தொடர்பாக முஸ்லிம்கள் மன வருத்தத்துடன் உள்ளனர். கொவிட் பரிசோதனை மேற்கொள்ளும் வைத்தியசாலைகள் பாலமுனை மற்றும் காத்தான்குடியில் உள்ளன. அங்கு முறையான கழிவகற்றும் திட்டங்கள் இல்லை. கழிவுகள் அனைத்தும் அருகில் உள்ள நீருக்குள்ளும் நிலத்துக்குள்ளுமே செல்கின்றன. இவ்வாறான பின்புலத்தில் அடக்கம் செய்யப்படும் சடத்திலிருந்துவரும் நீரில் கொவிட் பரவும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த விசேடவைத்திய குழுவை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைசெய்துதருமாறு அமைச்சரை கேட்கின்றேன்.

சடலத்தை புதைக்கும் போது அதற்கு கொங்றீட் செய்யவும் நாம் தயாராகவுள்ளோம். அதற்கான முழு செலவையும் நானே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன். முஸ்லிம்களும் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்துள்ளனர். வைராக்கியம் ஏற்படுத்த வேண்டாம். அவர்களின் மனதை வெற்றிகொள்ளும்வகையில் செயற்படவேண்டும்.

எமது பிரதேசங்களிலும் கொவிட் பரவியுள்ளது. முஸ்லிம்கள் வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சைக்குச் செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளனர்.

பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்யவும் முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர். கள்ளத்தனமாக வீடுகளிலேயே இருக்கின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவது பாரிய சவாலாக மாறும். ஆகவே, முஸ்லிம் பிரதேசங்களில் சடலங்களை அடக்கம் செய்யும் அனுமதியை வழங்க வேண்டும். அதற்கான பாதுகாப்பை நாம் வழங்கத் தயாராக உள்ளோம்.– என்றார்.

# 24 மணி நேரத்தினுள் கொழும்பில் 294 பேருக்கு கொரோனா உறுதி!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 545 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்து 532 ஆக அதிகரித்துள்ளதாக கொவிட் – 19 பரவல் தடுப்பு செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இவர்களில் அதிகமானோர் கொழும்பிலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த 294 பேரும் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த 130 பேரும் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 36 பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டவர்களில் 4 பேர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 817 ஆக உயர்வடைந்துள்ளது.

இதனையடுத்து வைரஸ் தொற்றுக்கு உள்ளான 6 ஆயிரத்து 593 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் கடந்த 24 மணித்தியாலங்களில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான 4 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 122 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொலன்னாவ தபால் நிலையம் கொரோனா அச்சத்தால் பூட்டு!

கொலன்னாவை தபால் நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொலன்னாவை தபால் நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள 06 உப தபால் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள உப தபால் அலுவலகங்கள் இன்றைய தினம் திறக்கப்படவுள்ளன எனப் பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தபால் மற்றும் உப தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

குருநாகல் பிரதேசத்தின் தபால் அதிகாரியின் அலுவலகம் மற்றும் குருநாகல் பிரதான தபால் காரியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றும் 14 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானமையின் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாரதிபுரத்திலுள்ள விவசாயி வீட்டில் 3.5 கிலோ எடையில் மழை காளான்!





கிளிநொச்சி பாரதிபுரத்திலுள்ள விவசாயின் வீட்டில் 3.5 கிலோ எடையில் மழை காளான் முளைத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியிலுள்ள மாரிமுத்து ஆறுமுகம் என்ற விவசாயியின் வீட்டிலேயே இந்த மழைக்காளான் முளைத்துள்ளது.

இந்த ரகக் காளானை உணவுக்காகப் பயன்படுத்துவதாகவும், அதனை பிடுங்கும்போது 3.5 கிலோ எடையில் அது காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதில் ஓர்வகை பூச்சி தாக்கம் உள்ளதால் உணவுக்கு பயன்படுத்தாது பார்வைக்காக கடையில் வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக வீடுகள், வயல்நிலப் பகுதிகளில் சிறிய அளவிலான காளான்களே மழை காலங்களில் அவதானிக்க முடியும். 3.5 கிலோ எடையில் மழைக்காளான் அடையாளம் காணப்பட்டமையானது அப்பிரதேசத்தில் இதுவே முதல் தடவையாகும்.

# சிறைச்சாலை நெருக்கடியை குறைக்க திட்டம் ஒன்றை உடனே தயாரிக்குக!

## சட்டமா அதிபர் பணிப்பு



சிறைச்சாலைகளில் நெருக்கடியைக் குறைக்கும் வகையிலான செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் தப்புலெ டி லிவேரா, பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்தச் செயற்பாட்டுத் திட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னதாக முன்வைக்குமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார் என சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் நிலைமையால் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற அடிப்படையில், சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக, நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் ஏற்கனவே பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல்களை விடுத்திருந்த நிலையில், நேற்று இதுதொடர்பான செயற்பாட்டு அறிக்கையை தயாரிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

# கொரோனாவால் முஸ்லிம் சமூகம் இரட்டிப்பு வேதனை அடைகின்றது!

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம். முஷாரப்

இனவாதிகள் என்பவர்கள் அரசியல்வாதிகளாக மட்டும் இருக்க வேண்டுமென்பதில்லை. அதிகாரிகளாகவும் இருக்கலாம் என்பதற்கு விசேட வைத்தியர் குழுவின் சில உறுப்பினர்கள் உதாரணமாகவுள்ளனர். அத்துடன் ஜனாஸா நல்லடக்கம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழு உலக சுகாதார ஸ்தாபனத்திலுள்ள நிபுணர்களைவிடவும் சிறந்த நிபுணர்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஷாரப் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

கொரோனா முதலாவது அலையில் கொரோனாவை சிறப்பாக முகாமை செய்து எமது மக்களைக் காத்தமைக்காகவும் இரண்டாவது அலையிலும் மக்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றமையாலும் சுகாதார அமைச்சர், சுகாதாரத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் பாதுகாப்புத்தரப்பினர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம் .

கொரோனா ஏற்படுத்தியிருக்கும் அழிவு சாதாரணமானதல்ல. இலங்கையில் எல்லாத்துறைகளும் சீரழிந்து நிலையில் நாம் எல்லோருமாகச் சேர்ந்து தான் இந்த நாட்டைக்கட்டியெழுப்ப வேண்டும்.

அத்துடன் இனவாதம் என்பது ஒரு தேர்தலை வெற்றி கொள்ள நமக்கு



வாய்ப்பாக அமையலாம் . ஆனால் இனவாதம் என்பது ஒரு நாட்டை வளர்ச்சியடையச் செய்ய ஒருபோதும் பங்களிக்காது என்ற யதார்த்தத்தை இந்த சபையிலுள்ள சகல உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

பல்வேறு நிபுணர்களைக் கொண்ட உலக சுகாதார ஸ்தாபனம் ,யுனெஸ்கோ போன்ற அமைப்புக்கள் தொழில்நுட்ப விடயத்தில் உலகுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கும் நிலையில், கொரோனாவால் உயிரிழப்போரின் உடல்கள் தொடர்பிலும் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளபோதும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது, முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் இலங்கையில் எரிக்கப்படும் விடயம் பெரும் துயரமாக மாறியுள்ளது.

ஜனாஸாவை நல்லடக்கம் செய்யலாம் என்ற விவகாரம் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் முஸ்லிம்கள் இவ்வாறு நல்லடக்கம் செய்யப்படாமல் எரிக்கப்படுவதன் பின்னணியில் அரசின் சுகாதாரத்துறையால் ஒழுங்கமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு உள்ளது அதன் பிழையான வழிகாட்டுதல்களால் தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்தின் மத, கலாசார நம்பிக்கைகள் எல்லாம் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்றன. முஸ்லிம் சமூகம் கொரோனா பாதிப்பால் இரட்டிப்பு பாதிப்பை அடைந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த அரசியலில் உள்ளவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்த கொரோனா தாக்கத்தால் ஏற்படுகின்ற இறப்பை விடவும் இறந்த உடல்களை எரிப்பதால் வருகின்ற வலி முஸ்லிம் சமூகத்துக்குப் பெரும் வலியாக இருக்கின்றது. எனவே இந்த நிபுணர்கள் என்று சொல்லப்படுபவர்கள் உலக சுகாதார ஸ்தாபனத்திலுள்ள நிபுணர்களைவிடவும் சிறந்த நிபுணர்களா என்ற கேள்வியை இங்கு நான் எழுப்ப விரும்புகின்றேன்.

ஜனாதிபதி ,பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகியோர் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களின் உணர்வுகளை மதித்து நல்லடக்கம் செய்யலாம் என்று கூறியுள்ள நிலையில் இந்த நிபுணர்களைக் காரணம் காட்டி தொடர்ந்தும் தவறிழைக்கப்படுகின்றது. – என்றார்.

# பெருந்தோட்ட வைத்தியசாலைகளை விரைவில் தேசிய சுகாதாரக் கட்டமைப்பில் இணையுங்கள்!

## வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

பெருந்தோட்ட வைத்தியசாலைகளை தேசிய சுகாதார கட்டமைப்பில் இணைப்பதற்கான முன்மொழிவை கடந்த அரசாங்க காலத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளோம். சுகாதார அமைச்சர் இதுகுறித்து கவனம் செலுத்தி தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

முழு நாடும், மக்களும் எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினையாக கொவிட் பரவல் உள்ளது. இதனை அரசியல் மயப்படுத்தக் கூடாது என தெரிவிக்கப்பட்டாலும் இந்தப் பிரச்சினை எவ்வளவுதூரம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதென அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் கலாசார பண்பாட்டுக்கமைய கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும். இதனை அரசியல் பிரச்சினையாக்கி இழுபறி நிலைக்கு தள்ள வேண்டாம்.

மேலும் பெருந்தோட்டத்துறையின் சுகாதார நடவடிக்கைகள் மிகவும்கீழ்மட்டத்தில்காணக்கூடியதாக இருக்கின்றது. இது சுகாதார அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். பெருந்தோட்டங்களில் காணப்படும் தோட்ட வைத்தியசாலைகளை தோட்ட வைத்திய உதவியாளர்கள் தான் நடத்துகின்றனர். பெருந்தோட்டத்துறையின் சுகாதார நிலை குறித்து அரசாங்கம் கொள்கை ரீதியான ஒரு முடிவை எடுக்க வேண்டும். கடந்த அரசாங்கத்தின் போது சுகாதாரத்துறைக்கு குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் மூலம் தீர்வுகாணும் முயற்சிகளை எடுத்திருந்தோம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜாவின் முன்னெடுப்பில் சுகாதார அமைச்சில் உள்ள அதிகாரிகள் உட்பட துறைசார்ந்தவர்களை அழைத்து ஏற்படுத்த



வேண்டிய தீர்வை இனங்கண்டோம். குறித்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் தோட்டங்களில் 450 வைத்திய அலகுகள் இனங்காணப்பட்டன. அதில் 50 அலகுகளை அரச அமைப்பாக நடத்த ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மிகுதியையும் அரசாங்கம் உள்வாங்கி எவ்வாறு நடத்த வேண்டுமென்பது அறிக்கையில் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனால் சுகாதார அமைச்சர் இதுகுறித்து கவனம் செலுத்தி தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

# கொரோனா குணமடைவு 18 ஆயிரத்தை கடந்தது!

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 487 பேர் பூரணமாக குணமடைந்து வைத்தியசாலைகள் மற்றும் நோயாளர் பராமரிப்பு மையங்களில் இருந்து நேற்று (புதன்கிழமை) வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 304 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 24 ஆயிரத்து 532 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொற்றுக்கு உள்ளான மேலும் 6 ஆயிரத்து 106 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இந்த வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 122 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலைக்கு அவசர தொலைபேசி!

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக ஏதேனும் அவசர தேவைகள் காணப்படுமாயின் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி 117 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையைப் பதம் பார்த்தது 'புரெவி' வடக்கு, கிழக்குக்கு அதிகள பாதிப்பு

## பல இடங்களில் மக்கள் இடம்பெயர்வு





(ந.லோகதயாளன்)

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியில் உருவான தாழமுக்கம் சூறாவளியாக வலுவடைந்து, புதன் மதியம் திருகோணமலைக்கு தென்கிழக்காக 330 கிலோமீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்தது என வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'புரெவி' என்ற பெயர் கொண்ட இந்தச் சூறாவளி மேலும் வலுவடைந்து, புதன் மாலை அல்லது இரவு வேளையில் மட்டக்களப்புக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் கரையைக் கடந்து இலங்கையை ஊடறுத்துச் செல்லும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 75 கிலோ மீற்றர் முதல் 85 கிலோ மீற்றர் வரை வீசலாம் என வளிமண்டலவில் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கடல் பிராந்தியங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்வதால் மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

**வடக்கில்**

வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக இங்குள்ள சகல மாவட்டங்களிலும் தற்போது பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

வடக்கின் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி என்பன இதுவரை பாதிப்புக்களை அதிகம் சந்தித்துள்ளதோடு வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் தற்போது தாக்கம் காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்தமையால் போக்குவரத்து தடைப்பட்டது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் இருந்த 450 குடும்பங்கள் முன் ஆயத்தமாக நகர்த்தப்பட்டு 3 பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடும் மழை காரணமாக முல்லைத்தீவு நகருக்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது.

இதில் வட்டுவாகல் பாலம், செல்வபுரம் பகுதியிலான வீதிகள் இந்த நிலைமை காணப்படுகின்றபோதும் கேப்பாப்பிலவு - முல்லைத்தீவு வீதியே தற்போது தப்பியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்தமையால் அந்த வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் அந்த வீடுகளில் வசித்த இரு குடும்பங்கள் இடப்பெயர்வைச் சந்தித்துள்ளனர்.

இதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக மழை பெய்கின்றமையால் தாழ்நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. அதேவேளை, பொன்னாலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் இரு பாரிய மரங்கள் வீதியின் குறுக்கே வீழ்ந்தமையால் பிரதேச செயலாளர் பயணித்த வாகனம் உட்பட பலர் வீதியில் நீண்ட நேரம் பரிதவிக்கும் நிலைமை ஏற்பட்டது.

**கிழக்கில்**

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு முன் னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் அவசர நிலைமைகளின் போது செயற்படக் கூடியவகையில் மாவட்ட செயலாளர் பிரிவுகளிலுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின்போது பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லல், மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக உரிய பொறுப்பான நிறுவனங்கள் மற்றும் தொண்டர் அமைக்களை தயார் நிலையில் வைத்திருப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த சூறாவளியானது கடற்பரப்பிலிருந்து நிலப்பரப்பை நோக்கி நகரும் போது நீர் நிலப்பரப்பை நோக்கி வரும் வாய்ப்புக்கள் உள்ளன எனவும், அத்தகைய சந்தர்ப்பங்களில் சுனாமி ஏற்படுதாக எண்ணி மக்கள் அச்சமடையத் தேவை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொன்னாலை கடற்பரப்பில் மீனவரைக் காணவில்லை!



யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணம், பொன்னாலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார்.

சுழிபுரம், பெரியபுலோவைச் சேர்ந்த செல்வராசா செல்வக்குமார் (வயது 37) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே நேற்றிரவு 8 மணியளவில் காணாமல்போயுள்ளார்.

பிரதேச மக்களும் தொழிலாளர்களும் இணைந்து இவரைத் தேடும் பணியில் இன்று ஈடுபட்டுள்ளனர். கடற்படையின் உதவி கோரப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர், பொன்னாலை வட்டார உறுப்பினர் மற்றும் பொன்னலை கிராம சேவையாளர் ஆகியோரும் இன்று காலை சென்றிருந்தனர்.

# வடக்கில் இரு நாள்களுக்கு பாடசாலைகள் மூடப்படும்!



கொழும்பு, டிசெ. 02

வடக்கு மாகாணத்தில் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் பாடசாலைகள் மூடப்படும் என்று மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் கொரோனா அச்சுறுத்தலால் ஏற்கனவே மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன் னார் மாவட்டப் பாடசாலைகளுக்கு இரண்டு நாள்கள் விடுமுறை நாளை தொடக்கம் விடப்படுகின்றது.

மாவட்ட செயலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநரால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# சிறைக்கும் கைதிகளுக்கும் புதிய இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, டிசெ. 02

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்தே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று முற்பகல் அவர் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

குறித்த பதவியில் இருந்த சுதர்னி பெர்னாண் டோபுள்ளே, சுகாதார சேவைகள், தொற்றுநோய் மற்றும் கொரோனாத் தடுப்பு இராஜாங்க அமைச்சராக நேற்று முன்தினம் மாற்றப்பட்டிருந்தார்.

இதேவேளை, இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகவும் லொஹான் ரத்வத்தே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் மரம் முறிந்து விழுந்ததில் 30 நிமிடங்கள் போக்குவரத்து தடை



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, டிசெ.02

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்ணீரூற்று - நெடுங்கேணி பிரதான வீதியில் களிக்காட்டுப் பகுதியில் வீதிக்கு குறுக்காக மரம் ஒன்று சரிந்து விழுந்துள்ளது.

இதனால் குறித்த வீதி ஊடான போக்குவரத்து இன்று சுமார் அரை மணி நேரமாக தடைப்பட்டிருந்தது

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சி யாக மழை பெய்து வருகின்ற நிலையில் காற்றும் வீசி வருகின்றது. இந்தநிலையில் குறித்த வீதியோரத்தில் நின்ற பாரிய மரமொன்று வீதிக்கு குறுக்காக சரிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது

இதனைத் தொடர்ந்து அந்த வீதியால் வந்த வாகனச் சாரதிகள் மற்றும் இராணு வத்தினர் இணைந்து குறித்த மரத்தை அகற்றினர். அரை மணி நேரத்தின் பின்னர் வீதியினூடாக போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

# பலியான 11 கைதிகளில் 9 பேருக்குக் 'கொரோனா'

கொழும்பு, டிசெ. 02

மஹர சிறைச்சாலை வன்முறையில் உயிரிழந்த 11 கைதிகளில் 9 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என ராகம வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஸ்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் காயமடைந்துள்ள கைதிகளுள் 40 இற்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்றியுள்ளது எனவும் தகவல் வெளியிடப்பட் டுள்ளது.

அதேவேளை, மஹர சிறைச்சாலை கலவரம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில், உள்ளக விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# சிறைச்சாலை மோதல் தொடர்பாக ஆராய மேலுமொரு குழு நியமனம்!

மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பான விசாரணைக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 12 அதிகாரிகள் உள்ளடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவால் இந்தக் குழு நியமிக்கப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 104 பேர் காயமடைந்து றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே நீதியமைச்சாலும் குழு ஒன்று அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் குழுவொன்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மஹர சிறைச்சாலை பதற்ற நிலை தொடர்பான விசாரணைக்காக நீதியமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவில் இருந்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண விலகி யமையை அடுத்து, அந்த இடத்துக்கு பொலிஸ் அத்தியட்சகர் லலிந்த ரணவீர நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தமிழ்க் கிராம காணிகளை சிலர் அபகரிப்பதாகக் குற்றச்சாட்டு!





மன்னார் இரணை இலுப்பைக்குளம் பூசாரிகுளம் பகுதியில் தமிழ் மக்களின் கிராமங்களுக்குள் சிலர் அத்து மீறிக் காணிகளைப் பிடிக்கின்றனர் எனத் தெரிவித்து நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) அந்தப் பகுதியில் மக்கள் குழுமியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

அந்தக் காணி விடயம் தொடர்பாக வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருவதால் வழக்கு விசாரணை வழக்கு முடிவுறும் வரை முஸ்லிம் மக்களை அத்துமீறி அந்தப் பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதன்படி, சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நீதிமன்றத்தின் தடையுத்தரவையும் மீறி முஸ்லிம் மக்கள் அத்துமீறி தமிழ் மக்களின் காணிகளைத் துப்புரவு செய்து தென்னங்கன்றுகளை நட்டுள்ளனர் என மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும் உப குடும்பங்கள் 15 குடும்பங்கள் காணியற்ற நிலையில் வசித்து வரும் நிலையில் இவ்வாறு அத்து மீறி காணிகளைப் பிடிக்கின்றமை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் அந்தப் பகுதிக்கு வருகை தந்த கிராம உத்தியோகத்தர் மற்றும் மன்னார் மாவட்ட மடு பொலிஸாரும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் காட்டுப் பகுதியில் சுமார் 20 ஏக்கர் காணி துப்புரவு செய்யப்பட்டு தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இரு தரப்பினரையும் இன்று மடு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிறைச்சாலையில் உயிரிழந்த 11 பேரில் 9 பேருக்கு தொற்று!

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த 11 கைதிகளில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையின் கைதிகள் சிலருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டமையைத் தொடர்ந்து மேலும் சில கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுள் காயமடைந்த 71பேரில் 48 பேருக்கு துரித என்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக றாகம வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்பு வரைவு உருவாக்கம்: தமிழ்க் கட்சிகளால் ஐவரடங்கிய குழு!

புதிய அரசமைப்பு வரைவை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு, தமிழ்த் தேசியக் கட்சிகளால் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான சிபாரிசுகளை இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி அரசு கேட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடி விவாதித்தன.

இதன்போது, தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் சிபாரிசு வரைவொன்றை சமர்ப்பிப்பது என முடிவாகியுள்ளது.

கடந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த வரைவு, கடந்த அரசில் தமிழ் மக்கள் பேரவை சமர்ப்பித்த வரைவு, அத்துடன், வடக்கு மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆகியவற்றின் உள்ளடங்கங்களிலிருந்து மேம்பட்ட புதிய வரைவை உருவாக்கு வது எனவும் முடிவானது.

இந்த வரைவை உருவாக்க ஐந்து பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. மாவை சேனாதிராஜா தலைமையில் சீ.வீ.கே. சிவஞானம், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பேராசிரியர் வி.சிவநாதன் ஆகியோர் அரசமைப்பு வரைவை உருவாக்கும் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், எதிர்வரும் 10 நாள்களில் இந்தக் குழு வரைவை இறுதி செய்து, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்குச் சமர்ப்பிப்பது எனவும் முடிவாகியுள்ளது. கட்சித் தலைவர்களின் அங்கீகாரத்தின் பின்னர், அந்த வரைவை மாவை சேனாதிராஜா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சி.வி.விக்னேஸ்வரன் தரப்பில் நிபுணர்களை வைத்து ஓர் அரசமைப்பு வரைவை உருவாக்கி வருவதாக அவரது பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது. இந்த வரைவையும் உள்ளடக்கியதாக, புதிய வரைவைத் தயாரிப்பது எனவும் முடிவாகியுள்ளது.

# ஒரு குற்றத்துக்குத் தண்டிக்கப்பட்டவர் அதே குற்றத்துக்காக திரும்பவும் கைது

## அச்சுவேலிப் பொலிஸாரின் பொறுப்பற்ற செயல்

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், நீதிமன்றால் தண்டம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்ட முதியவரை பொலிஸார் மீளக் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் ஒரு நாள் தடுத்து வைத்து நீதிமன்றில் மீள முற்படுத்தியுள்ளனர்.

இதன்போது முதியவரின் குடும்பத்தினரால், அவர் ஏற்கனவே நீதிமன்றில் குறித்த குற்றத்துக்காகத் தண்டப் பணம் செலுத்தியமைக்கான ஆவணங்களைச் சமர்ப்பித்த போது, பொலிஸார் தாம் தவறுதலாக கைது செய்து விட்டோம் என மன்றில் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் வசிக்கும் முதியவர் ஒருவர் மீது கடந்த ஆறு மாத காலப்பகுதிக்கு முன்னர் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு சுமத்தி, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அதனையடுத்து மன்றில் முன்னிலையான முதியவர் குற்றத்தை ஏற்றுக் கொண்டு, மன்றால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தைச் செலுத்தி இருந்தார்.

இந்நிலையில், அச்சுவேலி பொலிஸார் முதியவரின் வீட்டுக்குச் சென்று, போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்துக்காக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த போது மன்றில் முன்னிலையாகாத குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறிக் கைது செய்துள்ளனர்.

அந்த முதியவர் மன்றில் தண்டப் பணம் செலுத்திய ஆவணங்களைப் பொலிஸாரிடம் குடும்பத்தினர் காண்பித்துள்ளனர். அத்துடன், முதியவர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார், நீதிமன்றில் தாம் முன்னிலையாகுவதாகவும், அல்லது காலையில் பொலிஸ் நிலையம் வருவதாகவும் கூறியுள்ளனர்.

குடும்பத்தினர் கூறிய எவற்றையும் செவிமடுக்காத பொலிஸார், எதுவாகினும் நீதிமன்றில் பாருங்கள் என கூறி முதியவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் ஒருநாள் முழுவதும் தடுத்து வைத்திருந்த முதியவரை மறுநாள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன் போது முதியவர் சார்பில், அவர் ஏற்கனவே குறித்த குற்றத்திற்காக தண்டம் செலுத்திய ஆவணங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டமையை ஏற்று முதியவரை மன்று விடுவித்தது.

குற்றத்துக்கு தண்டம் செலுத்திய முதியவரை தற்போதைய கொரோனோ சூழலிலை கூடக் கவனத்தில் எடுக்காது, இருதய நோயாளியான அவரை பொலிஸார் ஒருநாள் முழுவதும் தடுப்பு காவலில் வைத்திருந்த நடவடிக்கை தொடர்பில் முதியவரின் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# கரைச்சி பிரதேசசபை அவசரகாலப் பிரிவு

கரைச்சி பிரதேச சபையின் 24 மணிநேரமும் இயங்கும் அனர்த்த கால சேவை பிரிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அவசர கால நிலையைக் கருத்திற்கொண்டு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் அனர்த்த கால சேவை பிரிவு 24 மணி நேரம் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்தப் பிரிவானது கரடிப்போக்கு சந்தியில் உள்ள தீயணைப்பு பிரிவு கட்டடத்தில் இயங்குகின்றது. எனவே, எந்த நேரத்திலும் தொடர்பு கொண்டு அனர்த்த கால சேவைகளை பெற்று கொள்ளுமாறு தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

01.தவிசாளர் - 0773812857
02.செயலாளர் - 0775091296
03.பொறுப்பதிகாரி கரைச்சி பிரிவு - 1094774113574
04.பொறுப்பதிகாரி கண்டாவளை - 0776735939
05.தீயணைப்பு பிரிவு - 021 2283333

காலைக்கதிர் Kalaikkathir

# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!



வே.வரதசுந்தரம்

சாயி தரிசனம் - 2

# சிவலிங்க வழிபாடு

**'இந்த செகமே சாயிமயம்!**
**இந்த செகமே சாயி யுகம்!'**

புட்டபர்த்தி சாயீஸ்வரம் யாத்திரை வந்த அடியார்கள், இவ்வாறு பாடிக்களிப்பர்.

மரங்கள் தமது கிளைகளை அசைக்கும் போது, சாயி நாமத்தை உச்சரிக்கின்றன. பறவைகள் குரல் எழுப்பும்போது, சாயி நாமத்தை நினைவூட்டு கின்றன. வண்ண வண்ண மலர்கள் தமது இனிய நறுமணத்தை எங்கும் பரவச் செய்யும்போது, சாயி மகிமையை எடுத்துச் சொல்கின்றன. தேனீக்கள் ரீங்காரம் செய்யும்போது, சாயிநாமந் தரும் பேரின் பத்தைப் பறைசாற்றுகின்றன. விண்ணிலும், மண்ணிலும் இருந் தெழும் ஒலி கூட சாயி நாமத்தை எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.

புட்டபர்த்தியில் சிவராத்திரி விழாவும், சிவலிங்க வழிபாடும் முதன்மை பெறுகின்றன. சாயி அடியார்கள் சிவலிங்க வழிபாட்டின் மகத்துவத்தைச் சிந்திக்கின்றனர்.

சிவனாரது அருவுருவத் திருமேனியாகப் போற்றி வழிபடப் பெறுவது சிவலிங்கம். சிவலிங்க வழிபாடு அருவுருவ வழிபாடாகும். தேவாரப் பாடல் பெற்ற அனைத்துத் திருத்தலங்களிலும் கருவறையில் அமைந்துள்ளது சிவலிங்கத் திருமேனியாகும். பக்தர்கள் சிவலிங்கத்தை இலகுவாகத் தியானம் செய்யலாம்.

மானுட ஆக்கை வடிவு சிவலிங்கம். இதன் அடிப் பகுதி பிரம்மபாகம். மத்தியில் உள்ளது விஷ்ணு பாகம். நாம் மேற்பரப்பினை உருத்திரபா கம் என்போம். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் சிவலிங்கம் குறிக்கும்.

லிங்கத்திற்கு அவயம் இல்லாமையால் அது அருவம். தூண் போல் தோன்றுவதால் சிவலிங்கம் உருவம். ஈசன் அருவுருவானவன் என்பதை இது விளக்கும். உயிர்கட்கு அருளும் நோக்குடன் இறைவன் மேற்கொள்ளும் உருவமும், அரு வமும் இல்லாத தோற்றமே சிவலிங்கமாகும்.

சிவலிங்கம் மண், நீர், தீ, காற்று, வெளி என்று பஞ்ச பூதங்களாகக் கருதப்பட்டு வழிபாடு செய்யப் படுகின்றது. பஞ்ச பூதங்களுக்கும் பஞ்ச பூதத் தலங்களுண்டு. மண்ணைக் குறிக்கும் பிருதிவித் தலமான காஞ்சிபுரத்தில் உள்ளது பிருதிவி லிங்கம். நீரைக் குறிக்கும் அப்



புத்தலம் எனப்படும் திருவானைக்காவில் உள்ளது அப்புலிங்கம். தீயினைக் குறிக்கும் தேயுத் தலமாம் திருவண் ணாமலையில் உள்ளது தேயுலிங்கம். வளியி னைக் குறிக்கும் வாயுத்தலமாம் திருக்காளத்தியில் உள்ளது வாயுலிங்கம். வானைக் குறிக்கும் ஆகாயத் தலமாம் சிதம்பரத்தில் உள்ளது ஆகாய லிங்கம்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா நூற்றுக்கணக்கான பல்வகை லிங்கங்களை சிருஷ்டித்து அடியார்களுக்கு அருளுகிறார்.

சாயிபகவன் வழிகாட்டலில் நமது நாட்டினர் மட்டுமன்றி மேலை நாட்டினரும் சிவலிங்க வழி பாட்டில் ஈடுபாடு உள்ளவர்களாக உள்ளனர்.

சிவனுக்குரிய சிவராத்திரி தினத்தில் அடியார் கள் உண்ணாமை, உறங்காமை நோற்று இருக்க பாபா சிவலிங்கத்தை உருவாக்கி அருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஈற்றில், அதிகாலையில் பகவான் சாயிபாபாவைத் தரிசித்த வாறு, அவர் வழங்கிய பிரசாதத்தினை பாரணைபண்ணிய அருளனுபவம் சொல்ல வல்லேனல்லேன்.

(தொடரும்)

# கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ். மாநகர சபை 'பட்ஜட்' தோல்வி

## முன்னணி, ஈ.பி.டி.பி. கூட்டாக எதிர்ப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் நேற்று 5 மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று சபையின் மேயர் இம்மானுவேல் ஆனால்ட்டினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது வரவு - செலவுத்திட்டம் மீது இர கசிய வாக்கெடுப்பு வேண்டும் என ஒரு தரப்பினரும், பகிரங்க வாக்கெடுப்பு வேண்டும் என இன்னொரு தரப்பினரும் கோரினர். இதையடுத்து இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடுப்பா? என்பது தொடர்பில் தீர்மானிக்க வாக்கெடுப்பு நடத்தப்பட்ட்து.

அதில் இரகசிய வாக்கெடுப்புக்கு 19 வாக்குகளும், பகிரங்க வாக்கெடுப்புக்கு 24 வாக்குகளும் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் சபையின் செயலாளர் சீராளன் பகிரங்க வாக்கெடுப்பை நடத்தினார்.

அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் 16 உறுப்பினர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலா ஓர் உறுப்பினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினருமாக மொத்தம் 19 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவருடனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் இணைந்து கூட்டாக 24 பேர் எதிராக வாக்களித்தனர். இதனால் 24 இற்கு 19 என்ற வகையில் வரவு - செலவுத்திட்டம் தோல்வியடைந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மொத்தம் 45 உறுப்பினர்கள் உள்ள நிலையில் நேற்றைய அமர்வில் 43 உறுப்பினர்கள் பங்கேற்றனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹர கலவரத்தின் சகல உண்மைகளையும் நாடாளுமன்றில் அம்பலப்படுத்துவோம்

## நீதி அமைச்சர் அலி சப்ரி திட்டவட்டம்

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் கவலையடைகின்றோம். அந்தச் சம்பவம் தொடர்பான அனைத்து உண்மைத் தகவல்களும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

மஹர சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஐவரடங்கிய குழுவினர் தமது பணிகளை முன்னெடுப்பார்கள். ஒரு மாதத்துக்குள் முழுமையான விசாரணை அறிக்கையையும், ஒரு வாரத்துக்குள் இடைக்கால அறிக்கையையும் சமர்ப் பிக்குமாறு கோரியுள்ளேன்.



அத்துடன்,மேற்படிசம்பவம்தொடர்பில் சி.ஐ.டியினரும்தனியாகவிசாரணைநடத்துவார்கள். இதற்கான பணிப்புரையை பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ளார்.

இப்படியொரு சம்பவம் நடந்திருக்க கூடாது என்பது தான் அனைவரினதும் எதிர்ப்பார்ப்பு. அரசு என்ற வகையில் எமது கவலையை வெளியிடுகின்றோம். பின்னணி தொடர்பில் முழுமையாக ஆராயந்த பின்னர் தகவல்கள் முன்வைக்கப்படும். இதற்காகச் சிறிது காலம் வழங்குமாறு கோருகின்றேன். - என்றார்.

# புரெவிப் புயலினால் நேர்ந்த அனர்த்தங்கள்

கிளிநொச்சி...







மட்டக்களப்பு...





முல்லைத்தீவு....







மன்னார்.....







## புரட்டிப் போட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புரவி புயலின் தாக்கத்தினால் வடக்கு மாகாணத்தில் அதிக மழை வீழ்ச்சி ஏற்பட்டது. புயலின் தாக்கமும் எதிர்கொள்ளப்பட்டது.

சீரற்ற கால நிலை காரணமாக நேற்று நள்ளிரவு வரை வடக்கில் 750 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 200ற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர் எனப் பதிவாகியுள்ளதோடு 10பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் மூவர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் 5 மாவட்டங்களும் அதிகம் பாதிப்புக்களை சந்தித்துள்ளமையோடு வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் நள்ளிரவுக்குப் பின் தாக்கம் காணப்படுகின்றது.

இதுவரை முல்லைத்தீவில் களுக்கேணிக் குளம் ஒரு அடி வரையில் வான் பாய்கின்றது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் இருந்த 450 குடும்பங்கள் முன் ஆயத்தமாக நகர்த்தப்பட்டு 3 பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளர் .

இதேநேரம் கடும் மழை காரணமாக முல்லைத்தீவு நகரிற்குள் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றது. இதில் வட்டுவாகல் பாலம், செல்வபுரம் பகுதியிலான வீதிகள் இந்த நிலமை காணப்படுகின்றபோதும் கேப்பாபுலவு முல்லைத்தீவு வீதியே தற்போது தப்பியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் இரு வீடுகளும் சேதமடைந்தன. இதனால் இரு குடும்பங்களும் இடப்பெயர்வை சந்தித்துள்ளன.

இதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக மழை பொழிவு இருந்தது. தாழ் நிலங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது பல குடும்பங்கள் பாதிப்பினை எதிர் கொண்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று மீனவர்கள் கடலிற்கு சென்ற நிலையில் காணாமல்போயுள்ளனர்.

இதேநேரம் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 167 குடும்பங்களைச் சேர்ந்த 523 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 206 பேரும், வேலணையில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது உறவினர்களது வீட்டில் தங்கியுள்ளன எனவும், கல்லுண்டாய் பகுதியில் ஓர் இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தின் தேவன் பிட்டியில் 15 குடும்பங்களும், நானாட்டனில் 91 குடும்பங்களும் பாதுகாப்பாக நகர்த்தப்பட்டு இடம்பெயர்ந்தனர். கடற்கரையில் நிறுத்தி வைத்திருந்த இரு படகுகள் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கின் அனைத்து இடங்களிலும் பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

வடக்கு மாகாணத்தில் புரெவிப் புயலினால் 15 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன என்றும் - 140 வீடுகள் வரை பகுதியாகப் பாதிக்கப்படுள்ளன என்றும் –முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# 'புரெவி' புயலால் திருமலையில் 75 ஆயிரம் பேர் வெளியேற்றம்!

## முன்னாயத்த நடவடிக்கையாக

புரெவி சூறாவளியை எதிர்கொள்ள முன்னாயத்த நடவடிக்கையாக திருகோணமலை மாவட்டத்தில் 75 ஆயிரம் பேரை 237 மத்திய நிலையங்களில் தங்க வைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள புரெவி புயல் திருகோணமலை மாவட்டத்தைக் கடந்து செல்லவிருந்த நிலையில் மாவட்டத்தின் கரையோர பகுதி மக்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அந்த மக்களை வெளியேற்ற இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் உருவாகியுள்ள புரெவிப் புயலானதுநேற்று இரவு 7 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நாட்டை ஊடறுக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியமையால் இந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.


## கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1986.03.08
மதம் - இந்து K+K குருகுலம்
நட்சத்திரம் - அவிட்டம் 2
செவ் - -------
பாவம் - 24
கல்வி - பட்டதாரி
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண், வேறு எதிர்பார்ப்பு இல்லை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1980.10.02
மதம் - RC வேதம் K+K குருகுலம்
நட்சத்திரம் - -------
பாவம் - -------
செவ் - --------
கல்வி - A/L
தொழில் - ---------
எதிர்பார்ப்பு - வெளிநாடு தேவை அல்லது உத்தியோகம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


# மரண அறிவித்தல்



## திருமதி. சண்முகவடிவம்பாள் சண்முகம்

நீர்கொழும்பு திரு. சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார், சாந்த குமார், பிரேம்குமார், ஜெயசித்ரா ஆகியோரின் அருமைத் தாயாரும், இந்திரன், ஜெயந்தி, சுபாஷினி, சாதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், முருகபூபதி, பரிமள ஜெயந்தி, நித்தியானந்தன், ரீதரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும்,

நவரட்ணம், மாலதி, ஜெயா, சோபிதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயானா, ஜெயமிதா, ரஷிகா ஆகியோரின் அருமைப்பேத்தியாருமான திருமதி செல்வி சண்முகவடிவம்பாள் சண்முகம் நேற்றுமுன்தினம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை (01-12-2020) இலங்கை, நீர்கொழும்பில் காலமானார்.

அன்னாருக்கான இறுதி அஞ்சலி நீர்கொழும்பு அலஸ்வீதி இல்லத்தில் நேற்று 02ஆம் திகதி ( 02-12-2020) நடைபெற்று, அதனையடுத்து நீர்கொழும்பு பொது மயானத்தில் மாலை 4.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன.

உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
முருகபூபதி 00 61 4 166 25 766
letchumananmgmail.com

# மரண அறிவித்தல்

## திரு கந்தையா பூபாலசிங்கம்

(BSc, LLB Attorney at Law & Forensic Medicine)
ஓய்வு பெற்ற விஞ்ஞான மற்றும் ஆங்கில ஆசிரியர்
- St Mathews College விக்டோரியா கல்லூரி சுழிபுரம்.
சட்டத்தரணி மேல் நீதிமன்றம் கொழும்பு - (Home for Human Rights)

தோற்றம் 30.08.1934

மறைவு 30.11.2020



யாழ்ப்பாணம் சங்கானை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பூலசிங்கம் அவர்கள் 30.11.2020 அன்று இறைபதம் அனடந்தர்.

அன்னார் கந்தையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வீரசிங்கம் ஞானம்மா தம்பதிகளின் மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், பிருந்தா(வீரகேசரி, Neelakandan & Neelakandan, C.H.R.D), பிரதாபன்(கொழும்பு), திலீபன் (இங்கிலாந்து), அனிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான பாலசுந்தரம், கனகாம்பிகை, சுப்பிரமணியம் மற்றும் இராஜலட்சுமி, காலஞ்சென்ற ஜெகநாதன், பாலசந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்தோஷ்குமார், சந்திரிகா, சியாமளா, சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரசாந், பிரதீஷா, பிரவீன், பிரித்வீன், அனீஷா, பிரணவ், விகிர்தன ஆகியோரின் அன்பு பேரனுமார்.

அன்னாரின் பூதவூடல் இன்று 03-12-2020 வியாழக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து கல்கிஸ்ஸை மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு இறுதிக் கிரியைக்காக கல்கிஸ்ஸை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :-

| | |
|---|---|
| தேவராணி | + 94774055507 |
| பிருந்தா - கொழும்பு | +94773458836 |
| பிரதாபன் - கொழும்பு | + 94777760102 / |
| பிரான்ஸ் | + 33751255702 |
| திலீபன் - லண்டன் | + 447971590966 |
| அனிதா - சிட்னி | + 61466150541 |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2020 இல் வெளியிடப்பெற்றது.